**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 19-ம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் ஆனி திங்கள் 05-ம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 340/2022**
(குற்ற எண்.89/2021, தேவகோட்டை நகர் காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
தேவகோட்டை நகர் காவல்நிலையம்,
குற்ற எண்.89/2021.

….குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.ராஜ்குமார் (1 வது எதிரி) (44/2021)
த/பெ. தர்மலிங்கம்

2.ஆஷா (எ) திரேஷா (2 வது எதிரி) (34/2021)
க/பெ. ராஜ்குமார்

…..எதிரிகள்

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>தேவகோட்டைநகர்<br>காவல்நிலையம்,<br>குற்ற எண்.89/2021. |

<table>
<tr><td>2.</td><td>எதிரிகள்</td><td colspan="3">1.ராஜ்குமார் (1 வது எதிரி)<br>த/பெ. தர்மலிங்கம்<br><br>2.ஆஷா (எ) திரேஷா (2 வது எதிரி)<br>க/பெ. ராஜ்குமார்<br><u>1,2 வது எதிரிகளின் முகவரி:</u><br>எண். 465, அகதிகள் முகாம், தாழையூர் தேவகோட்டை.</td></tr>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டுகள்</td><td colspan="3">எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(2)-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>4.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="3">19/04/2021</td></tr>
<tr><td>5.</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">21/04/2021</td></tr>
<tr><td rowspan="2">6.</td><td>எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள்</td><td colspan="2">10/05/2021</td><td rowspan="2">முன்பிணை பெற்ற நாள்:<br>இல்லை</td></tr>
<tr><td>பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td colspan="2">10/05/2021<br>Bailed by Police</td></tr>
<tr><td>7.</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">17/10/2022</td></tr>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">24/03/2023, 13/05/2026</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">-----</td></tr>
<tr><td>10.</td><td>வழக்கின் சாட்சிகள் முதல்</td><td>சாட்சிகள்</td><td>முதல்</td><td>குறுக்கு</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | | விசாரணை | விசாரணை |
| | | அ.சா.1 | 23/05/2025 | 23/05/2025 |
| | | அ.சா.2 | 25/06/2025 | 25/06/2025 |
| | | அ.சா.3 | 25/06/2025 | 25/06/2025 |
| | | அ.சா.4 | 25/06/2025 | 25/06/2025 |
| | | அ.சா.5 | 25/06/2025 | 25/06/2025 |
| | | அ.சா.6 | 25/06/2025 | 25/06/2025 |
| | | அ.சா.7 | 04/07/2025 | 04/07/2025 |
| | | அ.சா.8 | 06/02/2026 | 06/02/2026 |
| | | அ.சா.9 | 05/03/2026 | 05/03/2026 |
| 11. | எதிரிகளிடம் குற்றம் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b)ன் கீழ் வினவிய நாள் | 27/04/2026 | | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | ------ | ----- | |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 24/03/2023 | | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 27/04/2026 | | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 19/06/2026 | | |
| 16. | தீர்வு | **முடிவாக, 1 வது எதிரி இதச** | | |

| | | |
|---|---|---|
| | | **பிரிவுகள் 294(b), 506(2)-ன் கீழும் 2 வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 324, 506(2)-ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுகளை பொறுத்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 வது எதிரி இதச பிரிவு 324 ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து 1 வது எதிரிக்கு இதச பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டிற்கு 5 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், ரூ.8,000/- அபராதம் விதித்தும் அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், கு.வி.மு.ச பிரிவு 248(2)ன் கீழ்** |

| | | |
|---|---|---|
| | | **உத்தரவிடப்படுகிறது.** |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ராஜீவ்காந்தி, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 19.04.2021 தேதி இரவு சுமார் 9.15 மணி அளவில் எதிரியான ராஜ்குமார் வீட்டிலிருந்த போது வாதியான யசோதரன் வீட்டிற்கு வந்து குடித்து விட்டு அசிங்கமான வார்த்தைகளால் தனக்கு தானே பேசிக் கொண்டு இருந்துள்ளதாகவும், இதைப் பார்த்த பக்கத்து வீட்டில் இருந்த போது வழக்கி எதிரி ராஜ்குமார் போய் ஏன் இப்படி பேசுகிறாய் பக்கத்தில் பெண்கள் எல்லோரும் இருக்க முடியவில்லை என்று சொன்னதற்கு இருவருக்குள்ளும் வாக்குவாதம் ஏற்பட்டு வாதியான யசோதரனை எதிரி ராஜ்குமாரும் எதிரி ஆஷா @ திரேஷாவும் தேவுடியா மகன் இவனால் வீட்டிற்குள் இருக்க முடியவில்லை என்றும் இருவரும் அசிங்கமாகப் பேசி அதில் எதிரி ராஜ்குமார் வாதியான யசோதரனை ஊண்டி இருக்கும் கல்லுக்காலில் தள்ளியுள்ளதாகவும், அதில் யசோதரனுக்கு தலையில் காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக 1 வது எதிரி மீது என்பவர் இதச பிரிவுகள் 294(b), 324-ன் படியும், 2

வது எதிரி மீது இதச பிரிவு 294(b)-ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(2)-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போது எதிரிகள் குற்றங்களை மறுத்துரைத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 யசோதரன் தனது சாட்சியத்தில் கடந்த 2 வருடத்திற்கு முன்பு இரவு 9.20 மணிக்கு தன் வீட்டில் இருந்த போது எதிரிகள் இருவரும் தன்னை அடித்து, தேவிடியா,புண்டா மகனே என்று தகாத வார்த்தையை சொல்லி 1 வது எதிரி ராஜ்குமார்

இரும்பு கம்பியால் தலையில் அடித்தார் என்றும் இடது கை முட்டியிலும் மேற்படி இரும்பு கம்பியால் அடித்தார் பிறகு மீண்டும் தலையில் அடித்தார்கள் பிறகு தன் மனைவி தன்னை தேவகோட்டை அரசு மருத்துவமணைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார் என்றும் மேற்படி புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அரசு மருத்துவமணையில் மேற்படி புகார் தான் கொடுத்தது சிகிச்சையில் இருந்த போது மேற்படி புகாரை கொடுத்தேன் என்றும் மேற்படி புகார் அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.7 மூர்த்தி தனது சாட்சியத்தில் தான் ஒருநாள் தேவகோட்டை அகதிகள் முகாம் அருகில் தேவகோட்டை நகர் போலீசார் வந்து சண்டை நடந்ததாக சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள் என்றும் தன்னிடம் மகஜரில் கையெழுத்து கேட்டார்கள் தான் போட்டுக்கொடுத்தேன் என்றும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் மேற்படி பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.8 முனியசாமி தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியம் அளித்து முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அ.சா.ஆ.4 மற்றும் 5

ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை அ.சா.ஆ.6 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.9 ஜெயமூர்த்தி தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாக புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்து விபத்து பதிவேடு மற்றும் காயத்தின் தன்மையை பற்றி கருத்து கூற இயலாது என்று வழங்கிய சான்று அ.சா.ஆ.7 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b) இன் கீழ் வினவ எதிரிகள் சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார்கள். மேலும் எதிரிகள் தமது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் புகாரை வலியுறுத்தும் விதமாக கடந்த 2 வருடத்திற்கு முன்பு இரவு 9.20 மணிக்கு தன் வீட்டில் இருந்த போது எதிரிகள் இருவரும் தன்னை அடித்து தேவிடியா புண்டா மகனே என்று தகாத வார்த்தைகளால் சொல்லி 1 வது எதிரி இரும்பு கம்பியால் தலையில் அடித்ததாகவும், இடது கை முட்டியிலும் இரும்பு கம்பியால் அடித்ததாகவும் பிறகு மீண்டும் தலையில் அடித்தார்கள் என்றும் தன் மனைவி தன்னை தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(8.2) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 மற்றும் 4 ஆகியோர் சண்டை பற்றி தெரியாது என்று பிறழ் சாட்சிகளாக சாட்சியம் அளித்துள்ளார்கள். அதேபோல் அ.சா.2, 5, 6 ஆகியோரும் என்ன சண்டை என்று தெரியாது என்று பிறழ் சாட்சிகளாக சாட்சியம் அளித்துள்ளார்கள். அரசு தரப்பு வழக்குப்படி சம்பவமானது 19/04/2021 இரவு 9:15 மணியளவில் நடைபெற்றுள்ள நிலையில் புகார் ஆனது 21/4/2021 ஆம் தேதி பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கையானது 21/04/2021 ஆம் தேதி 1:30 மணிக்கு பதிவு செய்யப்படுவதாக அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி காலதாமதத்திற்கு காரணமாக புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைக்கு ஸ்கேன் எடுக்க சென்றதால் காலதாமதம் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 ன்றோ அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவம் நடந்து மறுநாள் காலையில்தான் மருத்துவமனையில் வந்து போலீசார் தன்னிடம் புகார் எழுதி வாங்கிக் கொண்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 மறுநாள் புகார் கொடுத்ததாக குறிப்பிடும் நிலையில் அ.சா.8 விசாரணை அதிகாரி சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். மேலும் அரசு மருத்துவமனையில் இருந்து வந்த இன்டிமேஷனை தாக்கல் செய்யவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

(8.3) புகார் ஆனது தாமதமாக கொடுக்கப்பட்டுள்ள போதிலும் சம்பவம் இரவு 9.15 மணி அளவில் நடைபெற்றுள்ள நிலையில் அ.சா.1 அன்றைய தினமே இரவு 10.10 மணிக்கு தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்பது அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டின் மூலம் தெரிய வருகிறது. மேலும் அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டில் அ.சா.1 தான் 2 தெரிந்த நபர்களால் அன்றைய தினம் இரவு 9.00 மணி அளவில் இரும்பு கம்பியால் வீட்டில் இடது Temporal region மற்றும் Occipital region ஆகியவற்றில் தாக்கப்பட்டதாக குறிப்பிட்டு சம்பவம் நடைபெற்றதிலிருந்து எந்தவித காலதாமதமும் இன்றி சிகிச்சைக்கு சேர்ந்துள்ளது தெரிய வருகிறது. மேலும் அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டில் Head Injury, Open laceration of size 6x8 cm, 4x2 cm, 3x2 cm என்று அ.சா.1 க்கு தலையில் ஏற்பட்டிருந்த காயம் குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில் உள்ள காலதாமதத்திற்கு காரணமாக புகாரில் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு

பரிசோதனைக்கு சேர்ந்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில் முதல் தகவல் அறிக்கையில் காலதாமதம் இருப்பினும் அதனால் எந்தவித மிகைப்படுத்தல்களோ புனைவுகளோ ஏற்பட்டு இருப்பதாக தெரியவில்லை. ஏனெனில் சம்பவம் இரவு 9.15 மணியளவில் நடைபெற்றுள்ள நிலையில் புகாரில் சம்பவம் குறித்து என்ன விவரங்கள் குறிப்பிட்டுள்ளாரோ அதே விவரங்களை புகார்தாரர் மருத்துவரிடமும் சொல்லி இரவு 10.10 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்பது அ.சா.ஆ.7 விபத்துப்பதிவேட்டைக் கவனத்தில் கொள்கையில் தெரியவருகிறது. எனவே அ.சா.1 புகாரை வலியுறுத்தும் விதமாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவருடைய சாட்சியமானது குறுக்கு விசாரணையிலும் தகர்க்கப்படவில்லை.

(8.4) மேலும் அ.சா.1, தான் 1வது எதிரியால் இரும்பு கம்பியால் தலையில் அடிக்கப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதை உறுதிப்படுத்தும் விதமாக அ.சா.ஆ.7 விபத்துப் பதிவேட்டில் அ.சா.1க்கு தலையில் 3 வெட்டுக்காயங்கள் இருந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே அ.சா.1ன் சாட்சியத்தை சந்தேகிக்கும் விதமாக எந்த சூழ்நிலைகளும் அமையாத நிலையில் அ.சா.1ன் சாட்சியம் நம்பத்தகுந்ததாக உள்ளதாகவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில் உள்ள காலதாமதம் அரசு தரப்பு வழக்கை பாதிப்பதாக அமையவில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அ.சா.1, 1வது எதிரியால் இரும்புக்கம்பியால் தலையில் தாக்கப்பட்டது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.மேலும் இவ்வழக்கில் 1வது

எதிரி அ.சா.1ஐ தாக்க பயன்படுத்தியுள்ள ஆயுதமான இரும்பு கம்பி மரணம் ஏற்படுத்தக்கூடிய ஆயுதமாகும். எனவே மேற்படி ஆயுதம் இதச பிரிவு 324-க்கு உட்பட்ட கொடிய ஆயுதம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே 1வது எதிரி மீதான இதச பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்வு காணப்படுகிறது.

(8.5) 2வது எதிரி மீதான இதச பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டைப் பொருத்தவரையில் 2வது எதிரி கம்பியால் அடித்ததாக அ.சா.1 எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.1 அவருடைய சாட்சியத்தில் எதிரிகள் இருவரும் அடித்து தேவிடியா புண்டா மகனே என்று தகாத வார்த்தையால் பேசியதாக குறிப்பிட்டுள்ளபோதிலும் 2வது எதிரி எதைக்கொண்டு எந்த இடத்தில் அடித்தார் என்பது போன்ற எந்த விவரங்களும் இல்லாமல் அ.சா.1ன் சாட்சியம் பொதுப்படையாக அமைந்துள்ளது. 1வது எதிரி இரும்பு கம்பியால் தலையில் அடித்ததாக அ.சா.1 குறிப்பிட்டுச் சாட்சியம் அளித்துள்ள நிலையில் எதிரிகள் இருவரும் அடித்தார்கள் என்று 2வது எதிரி எவ்வாறு எந்த இடத்தில் அடித்தார் என்பது போன்ற விவரமும் இல்லாமல் பொதுப்படையாக அளித்துள்ள சாட்சியம் ஏற்கக்கூடியதாகவும் 2வது எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கக்கூடியதாகவும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(8.6) எதிரிகள் மீதான இதச பிரிவு 294(b) ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்தவரையில் அ.சா.1 ம் அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் தன் வீட்டில் இருந்தபோது எதிரிகள் இருவரும் தன்னை அடித்து, தேவிடியா புண்டா மகனே என்று தன்னை அசிங்கமாக பேசியதாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே இதச பிரிவு 294(b) ல் குறிப்பிட்டுள்ளதுபோல் சம்பவமானது பொது இடத்திலோ அல்லது பொது இடத்திற்கு அருகிலோ நடைபெற்றதாக அரசு தரப்பில் எந்த சாட்சியமும் அமையாத நிலையிலும், எதிரிகள் பேசியதாக சொல்லப்படும் வார்த்தைகளால் அறுவறுப்புணர்வு அடைந்ததாக எந்த சாட்சியமும் அமையாத நிலையில் எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 294(b)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

(8.7) எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்தவரையில் அ.சா.1 அவருடைய சாட்சியத்தில் எந்த இடத்திலும் எதிரிகள் தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. எதிரிகள் அ.சா.1 ற்கு கொலை மிரட்டல் விடுத்ததாக நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பில் வேறு எந்த சாட்சியங்களும் அமையவில்லை. எனவே எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள 506(2)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

9) 1 வது எதிரி இதச பிரிவு 324-ன் கீழ் குற்றவாளி என்று தீர்வு காணப்பட்டு உள்ளதால் 1 வது எதியிடம் அவருக்கு வழங்கப்படவுள்ள தண்டனைகள் குறித்து வினவியபோது எதிரி கீழ்க்கண்டவாறு பதில் அளித்தார்.

" நான் எந்த தப்பும் செய்யவில்லை குடிபோதையில் கல்லுக்காலில் விழுந்து அவரே காயத்தை ஏற்படுத்திக்கொண்டார். என்னை நன்னடத்தையில் விடுங்கள். என் மனைவிக்கு வாத நோய் உள்ளது நான் தான் பார்க்க வேண்டும்"

10) இவ்வழக்கில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளின் தன்மையையும், 1 வது எதிரி இரும்பு கம்பியால் வாதியின் தலையில் தாக்கியுள்ளதையும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் 1 வது எதிரிக்கு நன்னடத்தை சட்டத்தின் கீழ் எந்த பலனும் கிடைக்கத்தக்கது அல்ல என்றும், எனவே 1 வது எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**11) முடிவாக, 1 வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 506(2)-ன் கீழும் 2 வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 324, 506(2)-ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுகளை பொறுத்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 வது எதிரி இதச பிரிவு 324 ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து 1 வது எதிரிக்கு இதச பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டிற்கு 5 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், ரூ.8,000/-**

**அபராதம் விதித்தும் அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், கு.வி.மு.ச பிரிவு 248(2)ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.06.19 19:10:59 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | யசோதரன் | அ.சா.1 | புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்டவர் |
| 2. | சசிகலா | அ.சா.2 | கேள்விப்பட்ட சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 3. | மரியாயி | அ.சா.3 | கண்ணுற்ற சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 4. | செல்வக்குமாரி | அ.சா.4 | கண்ணுற்ற சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| 5. | பிரசாந்தன் | அ.சா.5 | கேள்விப்பட்ட சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 6. | வீரய்யா | அ.சா.6 | கேள்விப்பட்ட சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 7. | மூர்த்தி | அ.சா.7 | பார்வை மகஜர் சாட்சி |
| 8. | முனியசாமி | அ.சா.8 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலண்விசாரணை மேற்கொண்ட அதிகாரி |
| 9. | ஜெயமூர்த்தி (சார்பு ஆய்வாளர்) | அ.சா.9 | விசாரணை அதிகாரி |

## Judicial Form No. 68

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் | 23/05/2025 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து | 04/07/2025 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 06/02/2026 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | மாதிரி வரைபடம் | 06/02/2026 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | பார்வை மகஜர் | 06/02/2026 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |
| 6. | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | 06/02/2026 | அ.சா.ஆ.6 | அரசு தரப்பு | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | விபத்து பதிவேடு மற்றும் காயத்தின் தன்மையை பற்றி கருத்து கூற இயலாது என்று வழங்கிய சான்று | 05/03/2026 | அ.சா.ஆ.7 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரிகள் தரப்பு சாட்சி,சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.06.19 19:11:07 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**பின்குறிப்பு:-**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.